සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
WELFARE BENEFITS BOARD
මුදල්, ආර්ථික ස්ථායීකරණ හා ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
Ministry of Finance, Economic Stabilaization & National Policies
මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

| මගේ අංකය எனது இல My No. | WBB/02/Nitice/D/Div.s/2023 | ඔබේ අංකය உமது இல Your No | | දිනය திகதி Date | 2024.03.04 |
|---|---|---|---|---|---|

WBB/Circular/No-05/2024

அனைத்து பிரதேச செயலாளர்கள்/ பிரதி நலன்புரி நன்மைகள் ஆணையாளர்களுக்கு.

**அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தின் முதலாம் சுற்றில் தகுதி பெற்ற குடும்பங்களின் தேர்வுச் செயல்பாட்டில் நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கை.**

அஸ்வசுமா நலன்புரி நன்மைக் கொடுப்பனவு திட்டத்தின் கீழ் பல்வேறு காரணங்களுக்காக முதல் சுற்றில் முன்வந்த விண்ணப்பதாரர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் தேர்வு செயல்முறையின் பணிப் படிகளை முடிக்க முடியாமல் போனால், அவர்களுக்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை தொடர்பான வழிமுறைகளை வழங்குவதாகும்.

தற்போது, அஸ்வெசுமா நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் தொடங்கப்பட்டு, அதற்கான IWMS கணினி தரவு முறைமை தயார் செய்யப்பட்டுள்ளதால், மேலே குறிப்பிடப்பட்ட முடிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக கணினியில் ஆரம்பத்தில் பின்பற்றப்பட்ட பணிப் படிகளை இக் கணனி முறைமையில் பின்பற்ற முடியாது. இத் தொழில்நுட்பச் சிக்கல் காரணமாக, பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள மாற்று முறைகளைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

01. பல்வேறு காரணங்களால் எண்ணீட்டுக்கு உட்படுத்த முடியாதுபோன விண்ணப்பங்கள் :-
அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு QR குறியீடுகள் வழங்கப்படாததால், இரண்டாவது கட்டத்தில் விண்ணப்பிக்க வாய்ப்பு உள்ளது. அதற்காக அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

02. தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில், தெரிவுக்குழுவினால் அனுமதிக்கப்பட்டு பிரதேச செயலாளரின் சிபாரிசு வழங்குவதற்கு வழங்கப்பட்ட இறுதித் திகதிக்குள் தெரிவுக்குழுக்களினால் அனுமதிக்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

02.01 முதல் சுற்றில் கணினி அமைப்பு மூலம் தெரிவுக்கு குழுக்கள் அனுமதி அளிக்கும் செயல்முறை தற்போது இரண்டாம் சுற்றின் ஆரம்பத்துடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே, தெரிவுக் குழுவால் அனுமதிக்கப்படாத விண்ணப்பங்கள் இருந்தால், பின்வரும் மாற்று முறைகளின் கீழ் தெரிவு செயல்முறை பின்பற்றப்படவேண்டும்.

කාර්යාලය அலுவலகம் Office | Tel: 009411-2151481 009411-2484600/4117 Fax 009411-2151482 | විද්‍යුත් තැපෑල மின்னஞ்சல் e-mail | welfarebenefitboard2016@gmail.com info@iwms.wbb.gov.lk | වෙබ් අඩවිය இணையதளம் Website | www.wbb.gov.lk

Scanned with CamScanner

1. **முதலாம் படி** :- நலன்புரி நன்மைகள் சபை யிலிருந்து சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் ஆவணங்கள் IWMS அமைப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதேச செயலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

2. **இரண்டாம் படி** :- பிரதேச செயலகத்தின் தெரிவுக்குழுவானது தகவல்களைப் பெற்று தேவையான பரீட்சைகளை மேற்கொள்வதுடன் பௌதீக ரீதியாக அதாவது கணனி முறைக்கு வெளியில் தீர்மானங்களை வழங்கி அந்த முடிவுகளை நலன்புரி சபைக்கு அனுப்ப வேண்டும்.

3. **மூன்றாம் படி:-** நலன்புரி நன்மைகள் சபையின் கணினி தரவு அமைப்பு மூலம் உள்ளிடப்பட்டு, மேல்முறையீட்டுக் குழுக்களுக்கு முடிவெடுக்க பரிந்துரைக்கப்படும் .

4. **நான்காம் படி** :- மேல்முறையீட்டுக் குழுவினூடாக கணினி முறைமை மூலம் தேர்வுக் குழுவின் முடிவுகளின் அடிப்படையில் முடிவுகளை வழங்கி அந்த முடிவுகளை நலன்புரி நன்மைகள் சபையிற்கு அனுப்புதல் வேண்டும்

5. **ஐந்தாம் படி**:- மேல்முறையீட்டுக் குழுவின் முடிவுகளை ஆய்வு செய்து நலன்புரி நன்மைகள் சபையினூடாக அனுமதியைப் பெறல் வேண்டும்.

02.02 தெரிவுக்குழுவால் மறு எண்ணீட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்தாலும், அதன்பின்னர் மேலதிக நடவடிக்கையெதுவும் எடுக்கப்படாத விண்ணப்பங்களுக்கும் மேலே உள்ள பணிப் படிகளைப் பின்பற்றலாம். இதற்காக உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு, மீண்டும் எண்ணீடு நடத்தப்பட்ட பின்னர் தெரிவுக்குழுவின் அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும்.

03. வழங்கப்பட இறுதித் திகதியின் பின்னர் தெரிவுக்குழுவால் அனுமதிக்கப்பட்ட விண்ணப்பங்கள் மீதான நடவடிக்கை:-

மேல்முறையீடுகள் கணினி அமைப்பு மூலம் உள்ளிடப்பட்டு மேல்முறையீட்டுக் குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன. மேல்முறையீட்டுக் குழுக்கள் எடுக்கும் முடிவுகளின் அடிப்படையில் தெரிவுகள் செய்யப்படும். இங்கு மேல்முறையீட்டுக் குழு மற்றும் நலன்புரி நன்மைகள் சபை மூலம் தெரிவுக்குழுவின் முடிவுகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படும்.

மேற்கண்ட அறிவுறுத்தல்களின்படி, முதற்கட்டமாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக பணிகளை விரைவில் முடிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

ஒப்பம்:-

ஜயந்த விஜேரத்ன

தலைவர்/ஆணையாளர்

சீனிவாசன் கிரிதரன்

மேலதிக ஆணையாளர்

பிரதி:- அனைத்து மாவட்டச் செயலாளர்கள்/மேலதிக நலன்புரி நன்மைகள் ஆணையாளர் :

- தேவையான ஒருங்கிணைப்புக்காக.

Scanned with CamScanner